

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 31-01-2025

# விழுப்புரத்தில் இரண்டு சின்னங்கள்

**“தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் இட்ட பணியை சட்டசபையில் தட்டாது செய்து முடிப்பதே எனது ஒரே வேலை” என்ற வாழ்ந்து மறைந்தவர் கொள்கைக் குன்றம் ஏ.கோவிந்தசாமி அவர்கள். “மாற்றார்கூட குறை சொல்ல முடியாத அளவுக்கு மிக நேர்மையோடு, ஒழுக்கத்தோடு, நாணயத்தோடு நடந்து கொண்டவர்” என்று தந்தை பெரியார் அவர்களால் பாராட்டப்பட்டவர் அவர்.**

**“எல்லாராலுமே ஒருமுகமாக ‘நல்லவர்’ என்று பாராட்டப்பட்ட ஓர் அபூர்வமான மனிதர் ஏ.கோவிந்தசாமி. ‘நல்லவர்’ என்று பெயர் எடுப்பது கடினம். அதிலும் அதிகாரப் பீடத்துக்கு வந்த பின்னும் ஒரு அரசியல்வாதி நல்லவர் என்ற பட்டத்தை இழக்காதிருந்தால் அது குறிப்பிடத்தக்கது ஆகும். ‘அதிகார சக்தி சித்தத்தைக் கெடுக்கும்’ என்ற பழமொழியைப் பொய்ப்பித்தவர் ஏ.கோவிந்தசாமி” என்று அவரைப் பாராட்டியவர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள்.**

**“ஏ.கோவிந்தசாமி அவர்கள் எல்லோருடனும் சுமூகமாகப் பழகும் பண்புள்ளவர். எடுத்துக் கொண்ட காரியத்தை முயற்சியுடனும் எவ்வளவு சிரமம் இருந்தாலும் செயல்படுத்திக் காட்டக் கூடியவர் அவர்” என்று போற்றினார் பெருந்தலைவர் காமராசர் அவர்கள். அத்தகைய பெருந்தகையாளரான ஏ.கோவிந்தசாமி அவர்களை பேரறிஞர் அண்ணா அவர்களும், தமிழினத் தலைவர் கலைஞரும் தங்கள் அமைச்சரவையில் வைத்து அழகு பார்த்தார்கள்.**

**“திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதும் ஓர் உழவர் பெருங்குடி மகனை வேளாண்மைத் துறை அமைச்சராக அமர்த்தினோம்” என்றார் முதலமைச்சர் அண்ணா அவர்கள். “எளிய குடும்பத்தில் பிறந்து, தொண்டுள்ளத்தோடு நாட்டுப் பணியாற்றி உழைப்பால் உயர்ந்தார். இந்த மாநிலம் வாழ - மக்கள் வாழ - கழகம் வாழ - கட்சியின் கட்டுப்பாடு தழைக்க தமது கடைசி மூச்சு வரை வாழ்ந்தவர். அவருக்கு நாம் செய்யும் மரியாதை அவர் விட்டுச் சென்ற பணியை ஒழுங்குற நிறைவேற்றுவதுதான்” என்றார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். இப்படி தமிழ்நாட்டின் தனிப்பெரும் தலைவர்கள் அனைவராலும் போற்றப்பட்டவர் ஏ.கோவிந்தசாமி.**

அவரது மிக முக்கியமான சாதனை என்பது இம்மாநிலத்துக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்ட தொடர்ந்து குரல் கொடுத்து வந்தது ஆகும். அத்தகைய ‘தமிழ்நாடு’ பெயர் மீட்பருக்கு விழுப்புரத்தில் மாபெரும் சின்னம் அமைத்து தமிழ்நாட்டு மக்களின் நன்றியை வெளிப்படுத்தி இருக்கிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

அதன் அருகிலேயே மற்றுமொரு சின்னமும் எழுந்துள்ளது. 21 சமூக நீதிப் போராளிகளுக்கு நினைவு மண்டபம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட வன்னிய சமுதாய மக்கள் தங்கள் சமூகநீதி உரிமையைக் கேட்டு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போராடியபோது சுட்டுக் கொல்லப்பட்டார்கள். 1987 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் இது நடந்தது.

1989 சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில் தலைவர் கலைஞர் அவர்கள், “தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நியாயமான கோரிக்கையை ஏற்று தனி ஒதுக்கீடு வழங்க வகை செய்வோம்” என்று வாக்குறுதி கொடுத்தார். ஆட்சிக்கு வந்த 43 ஆவது நாளில் 20 விழுக்காடு ஒதுக்கீட்டை வன்னியர் சமூகம் உள்ளிட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு வழங்கினார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். இதற்காக உயிர்நீத்த குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கினார் கலைஞர். அவர்தம் குடும்பத்துக்கு மாதம் தோறும் உதவித்தொகை வழங்கவும் உத்தரவிட்டார் கலைஞர்.

**கல்வி - வேலை வாய்ப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்து மக்கள் கடந்த 36 ஆண்டுகளாக படித்து, வேலைக்குப் போய் முன்னேற, முத்தமிழறிஞர் கலைஞர் இட்ட அந்தக் கையெழுத்துதான் காரணம்.**

கோனேரிக்குப்பத்தில் நடந்த வன்னியர் சங்க வெள்ளிவிழா மாநாட்டில் தலைவர் கலைஞரை மேடையில் வைத்துக் கொண்டு டாக்டர் ராமதாஸ் சொன்னார்:

“1987 ஆம் ஆண்டு முதல் இட ஒதுக்கீட்டுக்காக நாங்கள் போராடினோம், போராடினோம், 21 உயிர்களைப் பலி கொடுத்ததைத் தவிர ஒன்றும் நடக்கவில்லை. அன்றிருந்த அ.தி.மு.க. முதல்வரைப் பார்க்க 7 ஆண்டு காலம் மனுப்போட்டேன் பார்க்க முடியவில்லை. ஆனால் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தார். வந்தவுடன் என்னைக் கூப்பிட்டு அனுப்பினார். என்னைக் கூப்பிட்டு இடஒதுக்கீடு தந்த கலைஞர் அவர்களே உங்களுக்கு என் நன்றி!

இந்த சமுதாயம் என்றென்றும் உங்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் மட்டும் 20 சதவீதம் இட ஒதுக்கீடு தரவில்லை என்றால், இங்கே மத்திய அமைச்சர் சொன்னதைப் போல, கூலி வேலை செய்து கொண்டு வோட்டு மட்டும் போடுகின்ற ஒரு சமுதாயமாக இந்த ஒடுக்கப்பட்ட சமுதாயம் இருந்திருக்கும். அதை மாற்றிய பெருமை, அதற்கு வழி வகுத்த பெருமை, கலைஞர் அவர்களையே சாரும்.” என்றார். அத்தகைய சாதனையைச் செய்த இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

இச்சாதனைகளின் தொடர்ச்சியாக இருக்கிறார் இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். ஆறாவது முறையாகக் கழக அரசு அமைந்ததும், 1987 சமூகநீதிப் போராட்டத்தில் துப்பாக்கிச் சூட்டில் பலியான 21 சமூகநீதிப் போராளிகளுக்கு 4 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவித்தார். சொன்னபடி இதோ மணிமண்டபம் கட்டித் திறக்கப்பட்டுள்ளது.

**தலைநகரை நோக்கி வரும் சாலையில் விழுப்புரத்தில் இரண்டு சின்னங்கள் கம்பீரமாக எழுந்துள்ளன. இரண்டுமே தியாகத்தின் சின்னங்கள் ஆகும். நன்றி அறிவித்தலின் சின்னங்கள் ஆகும். இவை இரண்டையும் கட்டி எழுப்பியதன் மூலமாக புகழுக்குரியவரைப் போற்றும் புகழுக்குரியவராக உயர்ந்து நிற்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**



உத்தமர் காந்தியடிகளின் நினைவு நாளான தியாகிகள் நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (30.1.2025) தலைமைச் செயலகத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர், துறைச் செயலாளர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில், சேப்பாக்கம் மெரினா விளையாட்டுத் திடலில், பிப்ரவரி 14 முதல் 16 வரை நடைபெறவிருக்கும் தலைவர் 72 – கழக அணிகளுக்கிடையேயான மாபெரும் பகல்–இரவு கிரிக்கெட் போட்டியின் அழைப்பிதழை கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. வழங்கினார். உடன் கழக பொதுச் செயலாளர்– அமைச்சர் துரைமுருகன், கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர் க.பொன்முடி ஆகியோர் உள்ளனர்.

### பண்டைய பழங்குடியின மக்களுக்கான ‘பிரதமர் பெருந்திட்டத்தில்’

# தமிழ்நாடு அரசின் கூடுதல் நிதி ரூ.108.71 கோடி ஒதுக்கீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை, ஜன. 31 -**

**பண்டைய பழங்குடியின மக்களுக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டத்தில் தமிழ்நாடு அரசின் கூடுதல் நிதி ரூ.108.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

பண்டைய பழங்குடியின மக்களுக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் குடியிருக்கும் தோடா, இருளர், பனியன், காட்டுநாயக்கன், கோட்டா மற்றும் குரும்பா ஆகிய ஆறு பழங்குடியினர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டு வருகிறது.

பண்டைய பழங்குடியின மக்களுக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டத்தின் கீழ் 2023-24 ஆம் ஆண்டிற்கான இலக்காக 4811 வீடுகளை ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ளது. அதேபோல், 2024-25 ஆம் ஆண்டுக்கான இலக்கு 7,136 வீடுகள் ஆகும். ஆக மொத்தம் பண்டைய பழங்குடியின மக்களுக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கான மொத்த இலக்காக 11,947 வீடுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மொத்த இலக்கில் நாளதுவரை 6,559 வீடுகளுக்கு அனுமதி ஆணை வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் இருந்து வருகிறது. மீதமுள்ள வீடுகளும் தகுதியுள்ள பயனாளிகளுக்கு விரைவில் வழங்கப்படும்.

இத்திட்டத்தில் ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.2.00 இலட்சம் என ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்டு, அத்தொகை 60:40 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசால் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதற்காக நாளது வரை ரூ.22.466 கோடி பெறப்பட்டுள்ளது. இதில், ஒன்றிய அரசின் பங்குத்தொகை ரூ.13.48 கோடி மற்றும் மாநில அரசின் பங்குத் தொகை ரூ.8.98 கோடியாகும்.

இந்நிலையில், ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அலகுத் தொகையான ரூ.2.00 இலட்சம் வீட்டின் கட்டுமானத்திற்கு போதுமானதாக இல்லாததால் பழங்குடியின மக்களின் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு, அரசாணை (நிலை) எண்.36, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (ம.அ.தி2(1)த் துறை, நாள். 01.03.2024ன் மூலமாக வீட்டின் கட்டுமானத் தொகையினை சமவெளி பகுதியில் கட்டப்படும் ஒரு வீட்டிற்கு ரூ.5,07,000/ எனவும் மற்றும் மலைப்பாங்கான பகுதிகளில் கட்டப்படும் ஒரு வீட்டிற்கு ரூ.5,73,000/எனவும் (ஒன்றிய அரசின் அலகுத்தொகை ரூ.2.00 லட்சம் உட்பட) உயர்த்தி ஆணை வெளியிட்டுள்ளது.

அதன்படி, தமிழ்நாடு அரசு தற்போது ரூ.108.71 கோடியை மாநில அரசின் கூடுதல் நிதியாக விடுவித்து ஆணை வழங்கியுள்ளது. இத்தொகையிலிருந்து, வீட்டின் கட்டுமான நிலைக்கு ஏற்ப பயனாளிகளின் வங்கிகணக்கிற்கு நேரடியாக தொகை விடுவிக்கப்பட்டு வருகிறது.

இந்நிதி ஒதுக்கீடு “பண்டைய பழங்குடியின மக்களுக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டத்தின்” கீழ் கட்டப்படும் வீடுகளை விரைந்து முடிக்க உதவிகரமாக இருக்கும். விரைவில் அனைத்து வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தமிழ்நாடு அரசால் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### தமிழக முதல்வரின் நடவடிக்கைகளால்

# சிறுதானியங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது!

## அமைச்சர் இ.பெரியசாமி தகவல்!

*திண்டுக்கல், ஜன. 31-*

தமிழக முதல்வரின் நடவடிக்கைகளால் சிறுதானியங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் இ.பெரியசாமி கூறினார்.

தமிழ்நாடு அரசின் உணவுப் பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில், மாநில அளவிலான சிறுதானிய உணவுத் திருவிழா திண்டுக்கல் தனியார் கல்லூரியில் புதன் கிழமை நடைபெற்றது.

இந்த விழாவுக்கு அரசின் கூடுதல் தலைமைச் செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன் தலைமை வகித்தார். மக்களவை உறுப்பினர் இரா. சச்சிதானந்தம் முன்னிலை வகித்தார். அமைச்சர்கள் இ. பெரியசாமி, கே.ஆர்.பெரியகருப்பன், அர.சக்கரபாணி ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவில் 2022-23ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பில் சிறப்பாகச் செயல்பட்ட நாமக்கல், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள், கேடயங்கள் வழங்கப்பட்டன.

இதேபோல, நுகர்வோர் அமைப்புகளுக்கும், நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான போட்டிகளில் வெற்றி பெற்ற கல்லூரி, பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

விழாவில் அமைச்சர் இ. பெரியசாமி பேசியதாவது: உடல் ஆரோக்கியத்தில் சிறுதானியங்களின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. அரசு செயல்படுத்தும் திட்டங்கள் மககளை முழுமையாகச் சென்றடைகின்றன. இந்த வகையில், அரசு வழங்கிய பொங்கல் தொகுப்பை 88 சதவீதம் மக்கள் பெற்றிருக்கின்றனர். தமிழக அரசின் நடவடிக்கைகளால் சிறுதானியங்கள் குறித்த விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது என்றார்.



விழாவில் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பேசியதாவது: கூட்டுறவுத் துறையானது 2.21 கோடி குடும்ப அட்டைதாரர்களுடன் நேரடித் தொடர்பு கொண்டிருக்கிறது. மத்திய அரசின் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாத போதிலும், அதற்கான நிதியையும் தமிழக அரசு வழங்கி அந்தத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. நம் முன்னோர்கள் பயன்படுத்திய சிறுதானிய உணவுகளை நோக்கி இன்றைய தலைமுறையினர் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். சிறுதானியங்கள் குறித்து அரசு மேற்கொண்ட விழிப்புணர்வு நடவடிக்கைகள் பயனளிக்கத் தொடங்கி இருக்கின்றன என்றார் அவர்.

அமைச்சர் அர.சக்கரபாணி பேசும்போது, உடல் ஆரோக்கியத்தில் சிறுதானியங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, 2023ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது.

தருமபுரி, நீலகிரி மாவட்டங்களிலுள்ள நியாய விலைக் கடைகளில் விலையில்லா அரிசியுடன் 2 கிலோ கேழ்வரகு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்துக்காக கிலோ ரூ.42.90க்கு விவசாயிகளிடமிருந்து கேழ்வரகு நேரடியாகக் கொள்முதல் செய்யப்படுகிறது. இதன்மூலம், விவசாயிகளும் பயன் பெற்று வருகின்றனர் என்றார் அவர்.

விழாவில் உணவுப் பொருள் வழங்கல் துறை இயக்குநர் த.மோகன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணா துரை, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் ந.சுப்பையன், தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிறுவன மேலாண்மை இயக்குநர் சு. பழனிச்சாமி, மாவட்ட ஆட்சியர்கள் மொ.நா. பூங்கொடி (திண்டுக்கல்), கே.பி. கார்த்திகேயன் (திருநெல்வேலி), எம்.தங்கவேல் (கரூர்), எஸ்.உமா (நாமக்கல்), பி.ஆகாஷ் (நாகப்பட்டினம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



உலகப் பாவலர் தமிழன்னைத் தமிழ்ப்பேரவை பன்னாட்டமைப்பு – தமிழ்நாடு முப்பெரும் விழா – உலகப் பாவலர் தமிழன்னைத் தமிழ்ப் பேரவை தலைவரும் தமிழ்மாமணியுமான புலவர் வெ.அனந்தசயனம் இயற்றிய ‘கலைஞர் என் காதலன்’ கவிதை நூல் வெளியீட்டு விழா 25.1.2025 அன்று திருவண்ணாமலையில் நடைபெற்றது. கவிதை நூலை சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி வெளியிட கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் க.வேங்கடபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இவ்விழாவில் திருவண்ணாமலை வள்ளல் மாதவ சின்ராசு, புதுச்சேரி பாவலர் மு.அன்புச் செல்வம், பாவலர் மு.அருள்செல்வம் மற்றும் தமிழ்ச் சான்றோர்கள் பலர் கலந்து கொண்டனர்.